*__இருவரிச் செய்திகள்__*

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இதுவரை 303 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

------------

சூடானில் காலரா நோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சர் திரு. **Haitam Mohamed Ibrahim** தெரிவித்துள்ளார்.

------------

மத்திய காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 15 பேர் உயிரிழந்தனர்.

------------

ரஷ்யாவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7ஆக பதிவானது.

------------

உத்தராகண்ட் மாநிலத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக கடந்த 15 நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கேதார்நாத் செல்லும் பாதை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

------------

பஞ்சாபில் மூவாயிரம் புதிய அங்கன்வாடி பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. பக்வந்த்சிங் மான் அறிவித்துள்ளார்.

------------

ஹரியானாவில் ஜனநாயக மக்கள் கட்சியைச் சேர்ந்த 4 சட்டப்பேரவை உறுப்பினர்கள் ராஜினாமா செய்துள்ளனர்.

------------

